அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி ஒரு நியாயமான கேள்விதான். ஆனால், நான் உறுதியாகச் சொல்கிறேன்; நேற்றையதினம்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "அவர் சில இடங்களிலே பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று காவல் துறையினரைக் கண்டித்தபோது, "நாங்கள் உண்மையிலேயே தேடிக்கொண்டிருக்கிறோம்." என்று நேற்றையதினம்... (குறுக்கீடுகள்) சிரிப்பதனால் என்ன பிரயோசனம்? காவல் துறையின்மூலம் ஐந்து தனிப் படையினர் நியமிக்கப்பட்டு, நேற்றையதினம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. நான் உறுதியாகச் சொல்கிறேன், இன்றோ அல்லது நாளையோ அவர் கைது செய்யப்படுவார் என்ற உண்மையை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு, உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்து, என்னைப் பார்த்து, என்னிடம் அனுமதி கேட்டதன்பேரில்தான் அனுமதி கொடுக்கப்பட்டது. (குறுக்கீடு) அப்படியில்லை. அப்படிச் சொல்லவேண்டுமென்று அவசியம் இல்லை. உட்காருங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எத்தனையோ கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) Budget discussion இருக்கிறது.

(ஆ) ஈழத் தமிழர் படுகொலையைத் தடுக்கக் கோரி கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. தமிழ்வேந்தன் தீக்குளித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத்தில் நடைபெறுகின்ற இனப் படுகொலையைக் கண்டித்து, தமிழகமெங்கும் இளைய தலைமுறையினர் தீக்குளித்து, "எங்களுடைய உயிரையே நாங்கள் தருகிறோம்; இந்திய அரசே, ஈழத்தில் எங்களுடைய தொப்புள் கொடி உறவுகள்மீது நடைபெறுகின்ற, ராஜபக்சே அவர்கள் அரசினுடைய இனவெறிப் போரைத் தடுத்து நிறுத்துங்கள்" என்று தீக்கிரையாகி வருகின்றார்கள். அந்த வகையில், நேற்றையதினம் எங்களுடைய கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த

2009 பிப்ரவரி 19] [திரு. தி. வேல்முருகன்]

தமிழ்வேந்தன் என்ற 27 வயது இளைஞர், தன்னுடைய தேக்குமர உடலைத் தீக்கிரையாக்கி, சாகின்றபோதிலும் "ஈழத்தில் நடைபெறுகின்ற இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தத் தவறுகிறதே" என்ற வேதனையோடு, போர் உடனடியாகத் தடுத்துநிறுத்தப்பட வேண்டுமென்ற வரிகளைப் பதிவு செய்திருக்கிறார். இப்படி நாள்தோறும், மாவீரன் முத்துக்குமாரில் தொடங்கி, பள்ளிப்பட்டு ரவி, சீர்காழி ரவிச்சந்திரன், சென்னை அமரேசன், தமிழ்வேந்தன் என்று இளைய தலைமுறையினர், தங்களுடைய உயிர்களை மாய்த்துக்கொண்டு, இறந்துகொண்டிருக்கிறார்கள். நாம் இந்தச் சட்டமன்றத்தில் மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி, இந்தியப் பேரரசுக்கு அனுப்பிவைத்து, போரை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று நாம் கோரிக்கை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், Zero Hour என்ற பெயராலே இங்கே எழுப்பிவிடமுடியாது. எழுப்பப்படுகின்ற பிரச்சினை, பொது விவாதத்தில் பேசமுடியாத பிரச்சினையாக இருந்தால்தான் இங்கே எழுப்பலாமே தவிர, நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதத்தில் எல்லோரும் பேச இருக்கின்றீர்கள். எவரும் எந்தப் பிரச்சினையையும், பொது விவாதத்திலேதான் எழுப்பவேண்டும். ஏதேனும் ஒரு காரணத்தால், குறிப்பிட்ட ஒரு கருத்தை விளக்குவதற்காக மட்டும்தான் கவன ஈர்ப்பு அறிவிப்பு அனுமதிக்கப்படலாமே தவிர, Zero Hour என்ற பெயரால், தொடர்ந்து விவாதம் நடைபெற்றால், நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கு அர்த்தமே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன், நீங்கள் சொல்ல வேண்டிய விஷயத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள். கடலூர் தீக்குளிப்பு சம்பந்தமாக மட்டும் நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதை மட்டும் சொல்லி முடியுங்கள். அது சம்பந்தமாக உறுப்பினர் திரு. ஐயப்பன் அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-00

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமோ

அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ கொடுத்தால், அதை நீங்கள் படிக்க வேண்டும். இந்த உறுப்பினர், இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார் என்று நீங்கள் படிக்க வேண்டும். அவர் பாட்டுக்குப் பேசிவிட்டு, பிறகு மறுபடியும் இப்பொழுது கொடுத்தாரென்று சொல்வது சரியல்ல. ஆகையால், பேசுவதற்கு முன்னாலே எந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பேசுகிறார் என்று எங்களுக்கு, அவைக்குத் தெரியவேண்டும். (குறுக்கீடு) எப்போதும் சொல்கிறேன், Rules என்பது, நாம் வருவதற்கு முன்பே, செங்கோட்டையனும், நானும் அவைக்கு வருவதற்கு முன்பே rules இருக்கிறது. Rules are applicable to all. பிறகு, it is the discretionary power of the Speaker. நான் ஒத்துக்கொள்கிறேன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் நான்கு தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, பேரவைத் தலைவருடைய அனுமதியும் பெற்றுவிட்டுத்தான் நான் இந்த அவையில் பேசுகிறேன். இப்படி 5 பேர் தங்களுடைய உடலைத் தீக்கிரையாக்கிக்கொண்டு, மூன்று தீர்மானங்களை ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டினுடைய, 6 கோடி மக்களுடைய உணர்வுகளை நாம் மத்திய அரசுக்கு அனுப்பியிருந்தும்கூட நேற்றையதினம் மத்திய அரசினுடைய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், நீங்கள், "கடலூர் மாவட்டம், கடலூர் வண்டிப்பாளையம் இளைஞர், தமிழ்வேந்தன், த./பெ. பஞ்சாங்கம், இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து இறந்ததால், அவருடைய குடும்பத்தினர் மத்தியிலும் உலகத் தமிழர்களிடையேயும் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து" ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். இதை மட்டும்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இதை விட்டுவிட்டு நீங்கள் எங்கெல்லாமோ போனால் என்ன அர்த்தம்? I won't allow. (Interruption) No, no. I won't allow. திரு. ஐயப்பன் (குறுக்கீடு) அடுத்து, திரு. ஐயப்பன் (குறுக்கீடு) No.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடலூர் தொகுதியைச் சேர்ந்த ஜோதி என்கிற தமிழ்வேந்தன், நேற்று மதியம் இரண்டரை மணியளவிலே, தன்னுடைய உடலில்

2009 பிப்ரவரி 19] [திரு. கோ. ஐயப்பன்]

தானே தீ வைத்துக்கொண்டார். மிகவும் ஆபத்தான நிலையிலிருந்த அவர் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையிலே தீவிர சிகிச்சைப் பிரிவிலே சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி, இன்று *(19-2-2009)* அதிகாலை *1-30* மணியளவில் மரணமடைந்துவிட்டார். மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள ஆதி திராவிடர் குடும்பத்தைச் சேர்ந்த இவரது குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரிய நிவாரணம் வழங்கி உதவிட ஆவன செய்யுமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் *(குறுக்கீடு)* இது சம்பந்தமாக நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். இதே பிரச்சினை . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: Hon'ble Speaker Sir, I am on a point of order. Please, Speaker Sir... *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியில் ஒருவர்தான் பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* அனுமதியில்லை.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐயப்பன் அவர்களும் கடலூர் நகரத்தில் ஜோதி என்கின்ற தமிழ்வேந்தன் தீயிட்டுக் கொளுத்திக்கொண்டது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்து விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. வேல்முருகனும், திரு. ஐயப்பனும் இங்கே குறிப்பிட்டதைப்போல, காலையிலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு கடலூர் மாவட்டத்திலே தீயிட்டுக் கொளுத்திக்கொண்ட ஜோதி என்கிற தமிழ்வேந்தனுடைய குடும்பத்திற்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னபோது, உடனடியாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அந்தக் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு உரிய தொகை அந்தக் குடும்பத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐயப்பன் மூலமாக வழங்கப்படும்.